## 2.132 எஸ்.எஸ்.எல்.சி.–க்கும் குறைவான கல்வித் தகுதியுடைய வேலைவாய்ப்பு அலுவலகப் பதிவுதாரர்களுக்கு உச்ச வயது வரம்பில் சலுகை

தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு (எண்2) துறை

அரசாணை (நிலை) எண். 21 நாள் : 02.02.2000

**ஆணை**

தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை தொடர்பான மானியக் கோரிக்கையின்போது, 30.4.1999 அன்று சட்டமன்றப் பேரவையில் நடந்த விவாதத்திற்கு மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கையில் எஸ்.எஸ்.எல்.சி.–க்கும் குறைவான கல்வித் தகுதியுடைய வேலைவாய்ப்பு அலுவலகப் பதிவுதாரர்களுக்கு உச்ச வயது வரம்பில் சலுகை வழங்க அரசு பரிசீலக்கும் என்று அறிவிப்பு செய்திருந்தார்.

2. மேலே கண்டுள்ள அறிவிப்பின்படி எஸ்.எஸ்.எல்.சி.–க்கும் குறைவான கல்வித் தகுதியுடைய வேலைவாய்ப்பு அலுவலகப் பதிவுதாரர்களுக்கு உச்ச வயது வரம்பில் சலுகையை வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து வேலைக்காக காத்திருக்கும் ஒவ்வொரு முடிவுற்ற மூன்று ஆண்டுகளுக்கும் ஒரு வருடம் என்று, அதிகபட்சமாக 5 ஆண்டுகள் (Subject to a Maximum of 5years) வரை உச்ச வயது வரம்பில் சலுகை அளிக்க அரசு முடிவு செய்து அதன்படி ஆணையிடுகிறது.

3. மேலே பத்தி 2–இல் வெளியிடப்பட்ட ஆணை பற்றிய விவரங்களை அனைத்து வேலைவாய்ப்பு அலுவலகங்களிலும் உள்ள தகவல் பலகைகளில் (Notice Board) பொதுமக்களின் தகவலுக்காக வைக்க தக்க அறிவுரைகள் வழங்குமாறு வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**இரா. இரத்தினசாமி**
அரசு செயலாளர்